ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

හින්දු ධර්මය I
இந்து சமயம் I
Hinduism I

42 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**1.** (1) தைப்பொங்கல் (2) அறுவடைத் திருநாள் (3) உழவர் திருநாள்
(4) சூரியப்பொங்கல் (5) தீபாவளித் திருநாள்

**2.** (1) அஜந்தா ஓவியங்கள் (2) வாதாபி ஓவியங்கள் (3) எல்லோரா ஓவியங்கள்
(4) ராஜபுத்திர ஓவியங்கள் (5) சித்தன்னவாசல் ஓவியங்கள்

**3.** (1) மனோமயகோசம் (2) அன்னமயகோசம் (3) சப்தமயகோசம்
(4) விஞ்ஞானமயகோசம் (5) ஆனந்தமயகோசம்

**4.** (1) சர்க்கம் (2) வம்சம் (3) மனுவந்தரம்
(4) விருத்தி (5) வம்சானு சரிதம்

**5.** (1) கிருஷ்ணதேவராயர் (2) சனாவதிம்மர் (3) அச்சுதராயர்
(4) மகேந்திரவர்மன் (5) வித்தியாரண்யர்

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. **பொருந்தாத** அச்சோடிச் சொற்களைத் தெரிவுசெய்க.

**6.** (1) கோவிந்தபாதர் - ஆதிசங்கரர்
(2) இராமாநந்தர் - இராமானுஜர்
(3) அச்சுதப்பிரேக்சர் - மத்துவர்
(4) மெய்கண்டார் - அருணந்தி சிவாசாரியார்
(5) மறைஞானசம்பந்தர் - உமாபதி சிவாசாரியார்

**7.** (1) சமுத்திரகுப்தன் - பெரியகவி
(2) மகேந்திரவர்மன் - சங்கீரணசாதி
(3) இராசசிம்மன் - வாத்யவித்யாதரன்
(4) நந்திவர்மன் - வித்யாவிநீதன்
(5) இராஜராஜசோழன் - சிவபாதசேகரன்

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



**8.** (1) முயலகன் - ஆன்மா
(2) சடாமுடி - ஞானம்
(3) திருவாசி - ஓங்காரம்
(4) பாம்பு - மாயை
(5) மான் - இறைவன்

**9.** (1) ஆத்திசூடி - ஔவையார்
(2) ஆத்திசூடிப் பதிப்பு - ஆறுமுகநாவலர்
(3) ஆத்திசூடி உரை - பரிமேலழகர்
(4) புதிய ஆத்திசூடி - விபுலாநந்தர்
(5) ஆத்திசூடி வெண்பா - இராமபாரதி

**10.** (1) சிலப்பதிகாரம் - கண்ணகி பற்றிக் கூறும் இலக்கியம்
(2) கண்ணகி தெய்யோ - பௌத்தர்களின் காவல் தெய்வம்
(3) கஜபாகு - கண்ணகி வழிபாட்டை இலங்கைக்குக் கொண்டு வந்தவன்
(4) மார்கழித்திங்கள் - கிழக்கிலங்கையில் கண்ணகி சடங்கு இடம்பெறும் காலம்
(5) குளிர்த்தி - கண்ணகி சடங்கில் இடம்பெறும் முக்கிய நிகழ்வு

- **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **'அ'**, **'ஆ'** என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. **'அ'** நிரலுக்கு ஏற்ற விதத்தில் **'ஆ'** நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

**11.**

| | **அ** | | **ஆ** |
|---|---|---|---|
| (i) | சேரமான் பெருமாள் | A - | கோணேச்சரம் |
| (ii) | 2 ஆம் குளக்கோட்டன் | B - | சேதுநாணயம் |
| (iii) | இராசசிம்மன் | C - | பொன்வண்ணத்தந்தாதி |
| (iv) | சிங்கையாரியன் | D - | ஜனநாதமங்கலம் |
| (v) | இராஜராஜசோழன் | E - | காஞ்சி கைலாசநாதர் |

(1) B C A E D (2) C A E B D (3) C E A D B (4) D C B E A (5) D E A C B

**12.**

| | **அ** | | **ஆ** |
|---|---|---|---|
| (i) | பிரகிருதி | A - | அவித்தை |
| (ii) | பிராணாயாமம் | B - | மெய்கண்டதேவர் |
| (iii) | ஏகான்மவாதம் | C - | சாங்கியம் |
| (iv) | சிவஞானபோதம் | D - | பேதவாதம் |
| (v) | மத்துவர் | E - | பதஞ்சலி |

(1) A C D B E (2) B A D E C (3) C B D A E (4) C E A B D (5) D E C B A

**13.**

| | **அ** | | **ஆ** |
|---|---|---|---|
| (i) | திருக்கோணநாதர் | A - | மாதுமையாள் |
| (ii) | திருக்கேதீஸ்வரநாதர் | B - | நகுலாம்பிகை |
| (iii) | முன்னைநாதர் | C - | கௌரி அம்பாள் |
| (iv) | நகுலேஸ்வர பெருமான் | D - | சிவகாம சௌந்தரி |
| (v) | பொன்னம்பலவாணேச்சர் | E - | வடிவாம்பிகை |

(1) A C E B D (2) A E C D B (3) B C E A D (4) B E C D A (5) C D E A B

**14.**

| | **அ** | | **ஆ** |
|---|---|---|---|
| (i) | கோபாலகிருஷ்ண பாரதியார் | A - | நந்தனார் சரித்திரக்கீர்த்தனை |
| (ii) | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | B - | கருத்துரைக்கோவை |
| (iii) | பேராசிரியர் ஆ. சதாசிவம் | C - | தணிகைப்புராணம் |
| (iv) | சுவாமி விபுலாநந்தர் | D - | இலங்கைப் பூமிசாத்திரம் |
| (v) | கச்சியப்ப முனிவர் | E - | குருதேவர் வாக்கியம் |

(1) A B D C E (2) A D B E C (3) B A D C E (4) B D A E C (5) C B A D E

[பக். 3 ஐப் பார்க்க

| | அ | | ஆ |
|---|---|---|---|
| **15.** | (i) சிவன் | | A - புல்லாங்குழல் |
| | (ii) நாரதர் | | B - உடுக்கு |
| | (iii) சரஸ்வதி | | C - வீணை |
| | (iv) கண்ணன் | | D - மத்தளம் |
| | (v) திருநந்திதேவர் | | E - தம்புரா |

(1) A B C E D (2) B C E D A (3) B E C A D (4) C A D E B (5) C B A D E

● **16** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**16.** 'சுந்தரனாகமச் சொல்' எனப்படுவது
(1) தேவாரம் (2) திருப்பல்லாண்டு (3) பெரியபுராணம்
(4) திருவிசைப்பா (5) திருமந்திரம்

**17.** தன்னலம் கருதாத உழைப்பின் வழியாக அமைவது
(1) கர்மயோகம் (2) பக்தியோகம் (3) ஞானயோகம்
(4) தியானயோகம் (5) சிவயோகம்

**18.** கோயிற் கிரியைகளை மட்டும் கொண்ட தொகுதி
(1) கர்ஷணம், பிரதிட்டை, உற்சவம்
(2) அஷ்தி சஞ்சயனம், பிராயச்சித்தம், கிராமசாந்தி
(3) சிராத்தம், அந்தியேட்டி, மகாளயம்
(4) பேரிதாடனம், சரீரசுத்தி, விம்பசுத்தி
(5) பிரதிட்டை, ஏகோதிட்டம், பிராயச்சித்தம்

**19.** 'மகாநிருவாணதந்திரம்' என்பது
(1) சிவாகமமாகும். (2) சாக்தாகமமாகும்.
(3) வைணவ ஆகமமாகும். (4) உருத்திராகமமாகும்.
(5) உபாகமமாகும்.

**20.** இரண்டாம் பராக்கிரமபாகுவின் கல்வெட்டில் இடம்பெறும் ஆலயம்
(1) தேநுவரை விஷ்ணு ஆலயம்
(2) பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில்
(3) வண்ணை வெங்கடேஸ்வரப்பெருமாள் கோயில்
(4) வல்லிபுர ஆழ்வார் கோயில்
(5) வந்தாறுமூலை விஷ்ணு ஆலயம்

**21.** யோகசூத்திரத்தின் நான்கு பாதங்களுள் ஒன்றாக அமைவது
(1) புருடன் (2) அவிரோதம் (3) விபூதி
(4) சமன்வயம் (5) விஞ்ஞானம்

**22.** ஆயுர்வேத வைத்தியப் பயிற்சியை முடித்த மாணவர் ஒருவர் பின்பற்ற வேண்டிய அறிவுரைகள் அடங்கிய நூல்
(1) சுஸ்ருதசம்ஹிதை (2) சரஹசம்ஹிதை (3) சூதசம்ஹிதை
(4) பிருஹத்சம்ஹிதை (5) அஷ்டாங்க ஹிருதயசம்ஹிதை

**23.** 'திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல' எனக் குறிப்பிடும் நூல்
(1) சுக்கிரநீதி (2) காமாண்டகநீதி (3) மனுநீதி
(4) உலகநீதி (5) இராஜநீதி

**24.** கி.பி. 6 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் இந்தியாவில் வானியல் ஆராய்ச்சி மையம் இருந்ததாகக் கருதப்படும் இடம்
(1) கலிங்கம் (2) டெல்கி (3) உஜ்ஜைனி
(4) யவனபுரம் (5) இராஜஸ்தான்

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**25.** ஈழத்தில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலப்பகுதியில் தோன்றிய இலக்கியம்
(1) பறாளை விநாயகர் பள்ளு (2) கதிரைமலைப் பள்ளு
(3) தட்சிணகைலாச புராணம் (4) திருக்கரைசைப் புராணம்
(5) கைலாயமாலை

**26.** 'கல்நந்தி புல் உண்ட' சிறப்புக்குரிய ஆலயம்
(1) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
(2) ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம்
(3) சிலாபம் முன்னேச்சரம்
(4) காரைநகர் சிவன்கோயில்
(5) அமிர்தகழி மாமாங்கேச்சரம்

**27.** "அக்குமாலை கொண்டு அங்கையில் எண்ணுவார்" என உருத்திராக்கத்தின் பெருமையைப் பாடியவர்
(1) நாவுக்கரசர் (2) சம்பந்தர் (3) சுந்தரர்
(4) மாணிக்கவாசகர் (5) சேக்கிழார்

**28.** "இந்தியச் சிற்பக்கலை இந்தியாவுக்கே உரியது" எனக் குறிப்பிட்டவர்
(1) அலெக்ஸ்சாண்டர் கனிங்காம் (2) எட்வின் அல்றின் (3) மாக்ஸ் முல்லர்
(4) மோட்டிமர் உவீலர் (5) சேர் ஜோன் மார்ஷல்

**29.** மாருதப்புரவீகவல்லியின் குன்மவலி நீங்கிய தலம்
(1) நகுலேச்சரம் (2) திருக்கோணேச்சரம் (3) முன்னேச்சரம்
(4) மாமாங்கேச்சரம் (5) திருக்கேதீச்சரம்

**30.** அரங்கு, ஆலய முன்றல், அறுவடை விழா ஆகியவற்றுடன் தொடர்புடையதாக விளங்குவது
(1) காமன் கூத்து (2) கரகம் (3) காவடி
(4) மோகினி ஆட்டம் (5) வில்லிசை

- **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து கூற்றுகள் / விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**31. அளவைகள்**
(1) தத்துவச் சிந்தனை விளக்கத்துக்கு உதவுவனவாகும்.
(2) அறிவைப் பெறுவதற்கு ஆதாரமாய் அமைவனவாகும்.
(3) சைவசித்தாந்தம் மூன்று அளவைகளை ஏற்றுக்கொள்கிறது.
(4) பிரமாணங்கள் என்றும் அழைக்கப்படும்.
(5) நூலளவை என்பது அனுமானப் பிரமாணம் ஆகும்.

**32. கலியாணக்கால் வெட்டும் சடங்கு**
(1) கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடையது.
(2) இதில் 'தெய்வமாடல்' இடம்பெறும்.
(3) பூசகர் பெண்வேடம் தரித்து பங்குபெறுவார்.
(4) இதில் பூவரசு அல்லது வேம்பு பயன்படுத்தப்படும்.
(5) கல்யாணக்காலினைக் கோவலனாகக் கருதுவர்.

**33. வீடுபேறு**
(1) ஆன்ம இலட்சியத்தின் இறுதிப்பேறு ஆகும்.
(2) ஈடிணையற்ற ஆனந்தத்தை உணர்ந்து அனுபவிப்பது ஆகும்.
(3) பொருளும் இன்பமும் இருந்தாலேயே கிட்டும்.
(4) தளைகளில் இருந்து விடுபடுதல் ஆகும்.
(5) அறவழி நிற்றல் விடுதலைக்கு வழிசமைக்கும்.

**34. மாணிக்கவாசகர்**
(1) திருஅங்கமாலையைப் பாடியவர்.
(2) திருக்கோவையாரைப் பாடியவர்.
(3) திருவாதவூரில் பிறந்தவர்.
(4) ஆனிமகத்தில் முத்தியடைந்தவர்.
(5) ஊமைப்பெண்ணைப் பேசவைத்தவர்.

[பக். 5 ஐப் பார்க்க

**35.** சண்முகவடிவம்
(1) முருகக் கடவுளின் பிரதிமாலட்சணங்களுள் ஒன்றாகும்.
(2) சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து தீப்பொறிகளாகத் தோன்றிய வடிவம் ஆகும்.
(3) கந்தபுராணத்தில் சண்முகனின் வடிவம் குறிப்பிடப்பட்டுள்ளது.
(4) மறைபொருட் தத்துவ விளக்கங்களை உடையது.
(5) 'திகட சக்கர செம்முகம் ஐந்துளான்' எனச் சிறப்பிக்கப்படுகின்றது.

● மேல்வரும் பகுதியில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>இராஜராஜசோழன் | B<br>மாதுமை அம்மை | C<br>ஸ்ரீ வில்லிபுத்தூர் | D<br>சங்கர சுப்பையர் | E<br>சிவாயநம |
| F<br>தீட்சை | G<br>கருவூர்த்தேவர் | H<br>திருப்பாவை | I<br>பாவநாசம் | J<br>குப்பிளான் செல்லத்துரை |

**36.** திருக்கோணேச்சரத்துடன் தொடர்புடைய சோடி யாது?
(1) AI (2) BH (3) BI (4) CH (5) CI

**37.** சோழர்கால ஓவியத்தோடு தொடர்புடைய சோடி யாது?
(1) AC (2) AG (3) BD (4) BJ (5) CD

**38.** கதாப்பிரசங்கத்தோடு தொடர்புடைய சோடி யாது?
(1) AB (2) BC (3) DJ (4) EG (5) HI

**39.** ஆண்டாளுடன் தொடர்புடைய சோடி யாது?
(1) AC (2) CH (3) EH (4) HI (5) HJ

**40.** முத்தி மார்க்கத்தோடு தொடர்புடைய சோடி யாது?
(1) AE (2) BD (3) DE (4) EF (5) HJ

● **41** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **தலைப்புக்கு மிகப் பொருத்தமானதைத்** தெரிவுசெய்க.

**41.** சாங்கியம்
(1) அறுவகைத் தரிசனங்களில் ஒன்று
(2) யோக தரிசனத்துடன் தொடர்புடையது.
(3) பூரண அறிவு எனப்பொருள்படுவது.
(4) பிரகிருதி, புருடன் என இரு பொருள்களை ஏற்பது
(5) கபிலரால் தோற்றுவிக்கப்பட்டது.

**42.** இந்துக்களின் வானியல்
(1) உலக வாழ்வினை வளம்படுத்துவது
(2) இயற்கையுடன் இணைந்த ஆன்மிகவாழ்வுக்கு நெறிப்படுத்துவது
(3) வானிலையை அடிப்படையாகக் கொண்டே இந்துக்களின் சோதிடக்கலை தோற்றம்பெற்றது.
(4) இந்து வானியல் வரலாறு மிகவும் பரந்துபட்டது.
(5) வேதகால மக்கள் போதிய வானியல் அறிவுள்ளவர்களாக விளங்கினர்.

**43.** மகாபாரதம்
(1) பதினெட்டுப் பருவங்களை உடையது.
(2) உலகியல் சார்பும் தெய்வ நம்பிக்கையும் கொண்டது.
(3) அறுவகைச் சமயநெறிகள் பற்றிக் கூறுகின்றது.
(4) இந்து சமயத்தின் தர்மநெறியை விளக்குகின்றது.
(5) உலகப் புகழ்பெற்ற பகவத்கீதையை உள்ளடக்கியுள்ளது.

[பக். 6 ஐப் பார்க்க

**44. காணாபத்தியம்**
(1) கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் நெறி ஆகும்.
(2) விநாயகருடைய தோற்றம் பற்றிக் குறிப்பிடுகிறது.
(3) மகாபாரதத்தை வியாசர் சொல்ல விநாயகர் எழுதியதாகக் கூறும் நெறி ஆகும்.
(4) நம்பியாண்டார் நம்பி விநாயகனின் அருள் பெற்றவர் எனக் குறிப்பிடுகின்றது.
(5) ஐதரேயப் பிராமணம் விநாயகர் விக்கினங்களைத் தீர்ப்பவர் எனக் குறிப்பிடுகின்றது.

**45. சைவசித்தாந்தத்தில் கன்மம்**
(1) வினை, செயல் எனவும் பொருள்படுகிறது.
(2) ஆகந்துக மலம் எனப்படுகிறது.
(3) இன்ப துன்பம் தரும் புண்ணிய, பாவ வடிவமாக விளங்குகிறது.
(4) சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூவகைப்படுகின்றது.
(5) கன்மத்தின் பயன்கள் பௌதிகம், தெய்விகம், ஆத்மிகம் என வகுக்கப்படுகின்றன.

**46. இருக்குவேதம்**
(1) 1028 சூக்தங்களை உடையது.
(2) பத்து மண்டலங்களைக் கொண்டது.
(3) இயற்கை வழிபாட்டுக்கு முதன்மையளிப்பது.
(4) நாசதீய சூக்தத்தைக் கொண்டது.
(5) திரயீ வித்யாவினுள் ஒன்று

**47. உபநிடதங்கள்**
(1) கிரியைகளுக்கு எதிர்நிலையாக எழுந்தவை
(2) குருசீட உரையாடலில் அமைந்தவை
(3) வேதங்களின் இறுதிப்பகுதியாக விளங்குபவை
(4) அறிவு வழியால் இறைவனை அடைய உதவுபவை
(5) சீடன் குருவை நெருங்கி இருந்து ஞான உபதேசம் பெறுவதனை விளக்குபவை

**48. பஞ்சாட்சர மந்திரம்**
(1) நமசிவாய, சிவாயநம எனும் திருவைந்தெழுத்துக்களைச் சுட்டுகின்றது.
(2) நாயன்மார்களால் போற்றப்பட்ட சிறப்புக்குரியது.
(3) சமய நூல்கள் பலவும் இதன் முக்கியத்துவத்தைப் பேசுகின்றன.
(4) உயிர்களைச் சீரமைப்படுத்தி முத்திக்கு இட்டுச்செல்கின்றது.
(5) தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம் எனவும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

**49. இந்துக்களின் காலக்கணிப்பு**
(1) பதினைந்து திதிகளைக் கொண்ட இரு பட்சங்களை உடையது.
(2) யோகம், கரணம் என்பன காலக்கணிப்பில் முக்கியமானவை.
(3) திதிகளை அடிப்படையாகக் கொண்டது.
(4) வையத்துள் வாழ்வாங்குவாழ உதவுவது.
(5) இந்துப் பஞ்சாங்கம் மிகத்துல்லியமானது.

**50. புருடார்த்தங்களுள் பொருள்**
(1) அறத்துக்கு அடுத்தபடியாகக் கூறப்படுகின்றது.
(2) தனி மனிதனதும் சமுதாயத்தினதும் சிறப்பான வாழ்வுக்கு அவசியமானது.
(3) பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என வலியுறுத்தப்படுகின்றது.
(4) ஆன்மிக இலட்சியத்தை அடைய அறவழியில் பொருளீட்ட வேண்டும் எனப்படுகின்றது.
(5) சமய நூல்கள் பலவும் பொருளின் இன்றியமையாமையினை எடுத்துக்கூறுகின்றன.

* * *

Past Papers Wiki





සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

හින්දු ධර්මය II
இந்து சமயம் II
Hinduism II

42 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (அ) 'வேதம்' என்னும் சொல்லின் பொருளைத் தருக. (02 புள்ளிகள்)
   (ஆ) வேதங்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   (இ) யசுர் வேதத்தின் வழிபாட்டம்சங்களை விளக்குக. (06 புள்ளிகள்)
   (ஈ) அதர்வ வேதத்தின் சிறப்பியல்புகளை விவரிக்குக. (08 புள்ளிகள்)

2. (அ) 'சித்தர்' என்பதன் பொருளைத் தருக. (02 புள்ளிகள்)
   (ஆ) அட்டமா சித்திகளுள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   (இ) சித்தர்களின் இயல்புகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)
   (ஈ) திருமூலர் திருமந்திரத்தின் முக்கிய அம்சங்களை விவரிக்குக. (08 புள்ளிகள்)

3. (அ) 'ஆகமம்' என்பதன் பொருளைத் தருக. (02 புள்ளிகள்)
   (ஆ) வைணவ ஆகமங்களுக்குரிய மரபுகள் **இரண்டையும்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (இ) ஆகமம் கூறும் திருவுருவ அமைப்புமுறை பற்றிச் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)
   (ஈ) ஆகமம் சாராத வழிபாட்டு முறைகளின் சிறப்பம்சங்களை விவரிக்குக. (08 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி II

**4.** இந்து தத்துவ மரபில் அத்வைத வேதாந்தம் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) அத்வைதம் என்ற சொல்லின் பொருள் (04 புள்ளிகள்)

(ஆ) அவச்சேத வாதம் (04 புள்ளிகள்)

(இ) பிரமம் பற்றிய கொள்கை (06 புள்ளிகள்)

(ஈ) ஆன்ம விடுதலையும் அதற்கான வழிவகைகளும் (06 புள்ளிகள்)

**5.** சைவசித்தாந்தம் கூறும் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய சிந்தனைகளை மேல்வரும் தலைப்புகளில் விவரிக்குக.

(அ) ஏற்றுக்கொள்ளும் பிரமாணங்கள் (05 புள்ளிகள்)

(ஆ) பதியின் மூவகைத் திருமேனிகளும் எண்வகைக் குணங்களும் (05 புள்ளிகள்)

(இ) ஆன்மாவும் ஆணவமும் (05 புள்ளிகள்)

(ஈ) ஆன்ம விடுதலையில் குரு, லிங்க வழிபாடு (05 புள்ளிகள்)

**6.** இந்துக்களின் அன்றாட வாழ்வியலை நெறிப்படுத்துவதில் மூவகை யோகங்கள் பெறுகின்ற முக்கியத்துவத்தினை, மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(அ) 'யோகம்' என்ற சொல்லின் பொருள் (02 புள்ளிகள்)

(ஆ) கர்ம யோகம் (06 புள்ளிகள்)

(இ) பக்தி யோகம் (06 புள்ளிகள்)

(ஈ) ஞான யோகம் (06 புள்ளிகள்)

**7.** "இல்லறத்தினூடாகவும் ஆன்மிக இலட்சியத்தை அடைவதற்கு இந்து சமயம் வழிவகுத்துள்ளது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க. (20 புள்ளிகள்)

**8.** "திருக்கோயில்களூடாக வளம்பெற்ற கலைகளுள் சிற்பக்கலையும் ஒன்றாகும்" இக்கூற்றினைப் பல்லவர், சோழர் காலக் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library